குறள்நெறி

-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:119-கார்த்திகை-*15--தி.பி.2056* *திசம்பர்—1--- பொ.ஆ.2025*

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்



அண்ணாமலைப் பல்கலைக்கழக கலை,அறிவியல் விடுதிகளின் சார்பில் 5/3/55 அன்று திருவள்ளுவர் திருநாள் சிறப்பு விருந்தினர் பேராசிரியர் சி.இலக்குவனார் [இடமிருந்து இரண்டாமவர் நம் ஆசிரியரய்யா]

விழுதுகள் பரப்பியே தழைக்கவே சிறப்புடன்!

ஓடும் மணிப்பொறி ஓட்டத்தை விஞ்சியே
பாடுபட்டே உழைப்பார்! பல
நாடுகட்கே சென்று தந்தை பெரியாரின்
நன்மை விளைந்திடும் புன்மை களைந்திடும்
கொள்கைதனை உரைப்பார்! என்றும்
கேடு விளைத்திடும் மூட நம்பிக்கைகளைச்
சாடும் கருத்தெலாம் சாற்றும் பொழிவுகள்
ஏற்கும்வகை உரைப்பார்!பொய்மைப் பழங்கதை
தோற்கும் வகையினில் அய்யா உரைத்தவை
அத்தனையும் மொழிவார்!அறிவுக்கடல் ஆழ்ந்து
முத்தெனவே தருவார்!மதப் பித்தினையே களைவார்!
ஆகாகா காலநேரக் கணக்கில்லாத தொண்டு!
ஆகுதே ஆண்டும் தொண்ணூற்று மூன்று!

விடுதலை ஏட்டால் கெடுதலைப் போக்கியும்
உண்மை இதழால் உயர்வெலாம் ஆக்கியும்
பெரியார் பிஞ்சு சிறுவர் பயனுற
ஆங்கில ஏட்டால் அகிலம் தெளிந்திட
அயர்வின்றி உழைத்திடும் ஆற்றலைப் போற்றிட
வார்த்தை ஏதுமுண்டோ?சொல்வீர்!

ஆர்த்த புலமையும் வாதத் திறமையும்
ஆசிரியர்க்கே தனிச்சிறப்பு! ஏற்பதிலேது மறுப்பு?
தொண்டரைப் பேணிடத் தாயின் பரிவும்
தொண்டுபுரிவதில் பிள்ளையின் துடிப்பும்
கொண்ட தலைவரைக் கூறமுடியுமா?
ஆசிரியரய்யா பெருமைக்கு நிகரேது?
அன்புத் துணையும் பண்பார் மக்களும்
அய்யா பெரியார் வழங்கிய ஆலமரமாம்
இனமானம் காத்திடும் மேன்மைக் கழகமும்
விழுதுகள் பரப்பியே தழைக்கவே சிறப்புடன்!
வாழ்த்தி மகிழ்கிறேன்!வாழிய!வாழிய!

சிறப்பாசிரியர் குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்து,அமெரிக்கா) முனைவர் அன்புசெயா (சிட்னி,ஆத்திரேலியா) பாவலர் முரசு நெடுமாறன் (மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியா) பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ (பிரான்சு) கவிஞர் அழ.பகீரதன் (இலங்கை) கலாநிதி சயந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர் ச.இராசகுமாரன் (அயர்லாந்து) எலியாசு (சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ் (கம்போடியா) முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம்
பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

தமிழர் தலைவர் பிறந்தநாள் விழாவில் பாவலர்தலைவர் வைரமுத்து

பெரியார் திடல்
சென்றிருந்தேன்

ஆசிரியர்
கி.வீரமணி அவர்களின்
93ஆம் பிறந்தநாள் விழாவில்
கலந்துகொண்டேன்

‘இந்த நூற்றாண்டு கண்டதுண்டா
இப்படி ஓர் இயக்கத்தை’
என்று அவர் எழுதிய நூலை
வெளியிட்டேன்

பெரியார் உலகத்துக்கு
எனது எளிய கொடையாக
ஒருலட்ச ரூபாய் வழங்கினேன்

“காலம் கருணைமிக்கது;
தமிழர்களுக்கு அது
நன்மையே செய்திருக்கிறது

அறிஞர் அண்ணா மறைந்தார்;
ஒரு வெற்றிடம் உருவானது.
வெற்றிடத்தைக் காற்று
நிரப்பும் என்பது விதி;
கலைஞர் காற்றாக வந்து
நிரப்பினார்

பெரியார் மறைந்தார்;
ஒரு வெற்றிடம் உண்டானது.
ஆசிரியர் வீரமணி
காற்றாக வந்து நிரப்பினார்

கலைஞர் இல்லையென்றால்

பேராசிரியர் சி.இலக்குவனார் நூற்றாண்டு விழாவில் ஆசிரியரய்யா

பெரியார் கண்ட ஆட்சி
இருந்திருக்காது;
வீரமணி இல்லையென்றால்
பெரியாருக்கு இத்துணை நீட்சி
இருந்திருக்காது

நூறாண்டு வாழ்க என்று
அவரைக் குறைவாக
வாழ்த்தக்கூடாது.
நீங்கள் விரும்பும்வரை வாழ்க"
என்று வாழ்த்திப் பேசினேன்

நிறைவுரையில்
ஆசிரியர் வீரமணி
சிம்ம கர்ஜனை செய்துவிட்டார்

வெளியே மழை
உள்ளே புயல்
<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<<

19/12.2009-அன்று பேராசிரியர் சி.இலக்குவனார் நூற்றாண்டுவிழாவில் எழுச்சிமிக்க பொழிவை ஆற்றியதுடன் நீதியரசர்அரு.இலக்குமணன்,வா.செ.குழந் தைசாமி,சிலம்பொலி செல்லப்பனார், ஈரோடு தமிழன்பன்,கண.சிற்சபேசன் முதலானநூறு தமிழ்ச்சான்றோர்களுக்கு இலக்குவனார் உருவம் பொதிந்த வெள்ளிக்கேடயமும் வழங்கிச் சிறப்பித்தார் நம் ஆசிரியரய்யா.